பதிவு எண் : M 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : ஆனி 1 (14—6—68) வெள்ளி ★ வெளியூர் : ஆனி 2 (15—6—68) சனி [இதழ் : 302

உலகிலேயே சிறந்த நாடாக...!

சென்னை, ஜுன் 14—

"சமுதாயத்தின் பல பகுதிகள், இன்னும் முன்னேறுமலே இருக்கின்றன ; வளமிக்க எதிர்காலத்தை எதிர்நோக்கி அவர்கள், காலம் கடத்திக்கொண்டு வருகிருர்கள் !

'இந்தச் சமூகத்தின்மீது படிந்துள்ள புழுதியைத் தட்டியெறிந்து தூய்மைப் படுத்த வேண்டும் ; இந்தச் சமூகத்தை வேறு வடிவில் மாற்றியமைக்க வேண்டும் !

"நம்மிடம் செல்வமில்லை ; எனினும் உழைப்பின் மூலம் நமது நாட்டை உலகிலேயே சிறந்த நாடாக உருவாக்கிக் காட்டுவோம் !"

—அறிஞர் அண்ணா

உணவுப்பதுக்கலைக் கைவிடுங்கள்!

வணிகர்கட்கு அண்ணா வேண்டுகோள்

கூட்டுறவுத்துறை சிறப்பாக இயங்க யோசனை

காஞ்சிபுரம் ஜுன் 14—

"விளைகின்ற பொருள்களில் 100-க்கு 20 சதவிகிதத்தைத் தான் கொள்முதல் செய்கிரோம் ; மீதியுள்ளவற்றை வியாபாரிகள், தங்கள் தங்கள் தகுதிக்கு ஏற்றவாறு பதுக்கி வைத்துக்கொள்ளுகின்றனர் ; இப்படி உணவுப் பொருள்களைப் பதுக்குவதை வியாபாரிகள் தாங்களாகவே கைவிட்டுவிட வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், காஞ்சிபுரம் கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பு மலரை வெளியிட்டுப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் விளக்கியதாவது :—

"கூட்டுறவு இயக்கம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன் முதலாக ஏற்பட்டது ; விரிவடைந்தும் இருக்கிறது ; ஆனால் இன்னும் நேர்த்தியாக வேண்டும்.

ஒருவரே கூட்டுறவு இயக்கத்தில் தொடர்ந்து இருப்பதைவிட மற்றவர்களுக்கும் இடமளிப்பதற்காக விலகிக்கொண்டு, தங்களுடைய அரிய யோசனைகளைக் கூற முன்வர வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் விலகியபின், அதிகாரச் சார்பற்ற குழுவில் அவர்களை இடம்பெறச் செய்து, தங்களது யோசனையைப் பதவியிலிருப்பவர்களுக்குத் தருவதற்கான வழிவகைகளைச் செய்ய அரசு எண்ணமிட்டிருக்கிறது.

கூட்டுறவு மூலமும், அரசு மூலமும் நடைபெறும் தொழிற்சாலைகள்—சர்க்கரை ஆலைகள் முதலியவை நட்டத்திலே நடப்பதன் காரணம் எனக்கே தெரியவில்லை ; இதை இப்போது அரசு ஆராய்ந்து வருகிறது.

அரசாங்கம் — கூட்டுறவுத்துறை ஆகியவை ஏற்று நடத்தும் தொழில்கள் இலாபகரமாக நடைபெறுவதற்கு தொழில்களில் உள்ள வணிகப் பெருமக்கள் தங்கள் யோசனைகளையும், அனுபவங்களையும் அரசுக்கு அளிக்கவேண்டும்."

கழக ஆட்சியை எதிர்ப்பவன் தமிழனாகமாட்டான்!

தொல்லை கொடுக்க நினைக்கும் காலிகளுக்கு இடங்கொடுக்காதீர்!

சென்னை, ஜுன் 14—

"ஆட்சிக்கு வந்த பின், தி. மு. கழகத்தினர், பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிருர்கள் ! எந்தச் சரித்திரத்திலும், இவர்களைப்போல் இவ்வளவு நல்ல ஆட்சி செய்பவர்களைப் பார்க்க முடியாது !

"பகுத்தறிவுக்கு ஒத்த முறையில் காரியங்கள் செய்துவருகிருர்கள் ! அண்ணா அவர்கள் ஆட்சியைத் தமிழர்கள், ஆதரித்தே ஆக வேண்டும் !

"இன்று ஆட்சி நடத்துபவர்கள் உங்கள் குடும்பத்தவர்கள் என்று நீங்கள் எண்ணி அதை வலுப்படுத்த வேண்டும் ; இதை ஒவ்வொரு தமிழனும் செய்யவேண்டும் ! இதை எதிர்ப்பவன் தமிழனாகமாட்டான் !

"காலித்தனத்தாலும், கலவரத்தாலும் இந்த ஆட்சியைக் கவிழ்க்க எண்ணிக் காங்கிரசார் வேலை செய்கிருர்கள் ! தொல்லைகள் கொடுக்க எண்ணிப் பல கலவர வேலைகளில் ஈடுபடுகிருர்கள் ! இதற்காகவே கறுப்புக் கொடி காட்டி வருகிருர்கள் !

"காமராசர், முன்பு, அண்ணா ஆட்சியை ஆதரித்தார் ; 'ஐந்து ஆண்டு இந்த ஆட்சி இருக்கட்டும்' என்று கூறினர் ; ஆனால், அவருக்கே அங்கே எதிர்ப்புக் கிளம்பியது ! அவரும் அவர்களோடு சேரவேண்டிய நிலைமை வந்துவிட்டது !

"ஆகவே, இந்த ஆட்சியை அனைவரும் ஆதரித்து வலுப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

—பெரியார் ஈ. வெ. ரா.

(81-வது வட்டக் கூட்டத்தில்)

ஐம்பதாண்டு அனுபவத்தில் கண்டதில்லை!

கழக ஆட்சியின் மாட்சி குறித்துப் பெரியார் பெருமிதம்!

"காமராசர் மாத்திரமல்லாமல், காங்கிரசுக்காரர்கள் 100-க்கு 100 பேரும்--மனதில்--இன்றைய ஆட்சியைக் கவிழ்த்து அதைத் தங்கள் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு ஆடுவதற்கு ஆசை--புதிதாக 'ஞானம்' பெற்றவர்கள்போல், மக்களுக்கு 'ஞானோபதேசம்' செய்கிருர்கள் !

"இந்தக் காங்கிரசுக்காரர்களை எனக்குக் காந்தி காலம் முதல் நன்ருகத் தெரியும் ; இவர்கள் முன்னோர்களான சத்தியமூர்த்தி, அரங்கசாமி, இராசன், இராசகோபாலாச்சாரி, வி. வி. எஸ். ஐயர் காலம் முதல்--சொல்லப்போனால் திலகர் காலம் முதல்--எனக்குத் தெரியும் ! இவர்களின் தனிப்பட்ட தன்மை--சொந்த நடவடிக்கை--நாணயம்--நேர்மைத் தன்மை முதலியவைகளை குடும்ப சமேதராய் எனக்குத் தெரியும் !

"காங்கிரசு, தொம்பன் விளையாட்டுப் போன்றது ! 'ஒரு ரூபாயில் 10 ரூபாய் உண்டாக்குகிறேன் ; இந்தக் கீரித் தோலையும் பாம்புத் தோலையும் உயிருண்டாக்கி இரண்டையும் சண்டைப் போடச் செய்கிறேன் ; இந்த மாங்கொட்டையை செடியாக்கிப் பழம் பறித்துத் தருகிறேன்' என்று சொல்லுவது போல் தொம்பன் நடிப்பே ஆகும் !

"நாம் பட்டினி கிடந்தாலும், காங்கிரசு ஆட்சியைவிடத் தி. மு. க. ஆட்சி மேலான ஆட்சி' என்பது எனது 50 ஆண்டு அனுபவமாகும் ! புத்தி இருந்தால் பிழைத்துக்கொள்ளுங்கள் !"

—'விடுதலை' (12—6—68) இதழின் தலையங்கப் பகுதி.

தீ விபத்துப் பகுதியில் இரா. நெடுஞ்செழியன்

உடனடி நிவாரணமளிக்க அதிகாரிகளுக்கு ஆணை

சென்னை, ஜுன் 14—

வட சென்னை வியாசர்பாடி பகுதியிலுள்ள வ. உ. சி. நகர் பகுதியில் தீ விபத்தால் எரிந்து சாம்பலாகியுள்ள பகுதிகளை நேற்று காலை 10-மணிக்கு கல்வி--தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதோடு உடனடியாக நிவாரணப் பணிகளைச் செய்யுமாறு ரெவினியூ அதிகாரிகளுக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டார்.

32-வது வட்டத்தைச் சார்ந்த மோகன முதலி தோட்டத்தில் தீ விபத்து ஏற்பட்ட பகுதிகளையும், இன்று காலை 10-மணியளவில் தமிழகக் கல்வியமைச்சர் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரண ஏற்பாடுகளைச் செய்யுமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் ஜெயின் சங்கத்தி[illegible]யும் அமைச்சர் பாராட்[illegible] தெரிவித்தார்.

என். வி. என். [illegible]

சென்னை, ஜுன் 14—

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகட்கு இன்று காலை கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம். எல். சி. அவர்கள் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறினர்.

மாநகராட்சி உறுப்பினர்கள் அன்பிற்கரசன், பழனிச்சாமி, மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்து சுற்றிக் காண்பித்தனர்.

எம். ஜி. ஆர். ரூ. 10,000!

தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

சென்னை, ஜுன் 14—

சென்னையில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்டவர்கட்கு உதவுவதற்காகப் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம். எல். ஏ. அவர்கள், ரூ. 10,000 நன்கொடையாக வழங்கியிருக்கிருர்.

அவர் விடுத்துள்ள வேண்டுகோளில், வீடிழந்து தவிக்கும் மக்களுக்கு அரசினரும், மாநகராட்சியினரும் அளித்திடும் உதவியால் மட்டும் அவர்களின் துயரைப் போக்கிவிட முடியாது என்றும், 'கலைஞர்கள் கொடுத்து விடுவார்கள்' என்று மற்றவர்களும், 'மற்றவர்கள் கவனித்துக் கொள்வார்கள்' என்று கலைஞர்களும் இருந்து விடக்கூடாது என்றும், 'எல்லாத் தரப்பினரும் தங்களால் முடிந்த வரை தாராளமாக உதவ முன்வர வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

காஞ்சியிலிருந்து வந்த உதவி

காஞ்சி மத்திய கூட்டுறவு பாங்கியின் சார்பில் சென்னைத் தீ விபத்துத் துயர்துடைப்புப் பணிக்கென ரூ. 2,500 அளிப்பதாகப் பாங்கியின் தலைவர் மணலி இராமகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

காஞ்சி நகர பாங்கியின் தலைவர் திரு. கண்ணபிரான், ரூ. 2,500 வழங்குவதாக அறிவித்துள்ளார்.

விலைவாசிகள் குறைகின்றன

[illegible]ரக்குகளைப் பதுக்க வியாபாரிகள் அச்சம்

சென்னை, ஜுன் 15—

[illegible]மிழ்நாட்டில் பொதுவாக விலைவாசிகள் இறங்கிவரு[illegible]றன ! குறிப்பாக மிளகாய், எண்ணெய், பருப்பு வகைகளின் விலைகள் மிகவும் குறைந்துள்ளன.

இராமநாதபுரம் மிளகாய் ஒரு குவிண்டால் (100 கிலோ) ரூ. 250 வீதம் விற்றது--இப்போது ரூ 155 முதல் ரூ 160 வரை விற்கிறது. ஆந்திரத்து மிளகாய் ரூ. 150 முதல் 160 வரை விற்கிறது.

பொதுவாக விலைவாசிகள் குறைந்து வருவதால் வியாபாரிகள் சரக்குகளை இருப்பில் வைக்க அஞ்சி, தள்ளிவிடப் பார்க்கிருர்கள் ; இதுவே விலை குறைவுக்குக் காரணம் என்று வியாபாரிகள் தரப்பிலிருந்து கூறப்படுகிறது.

17 கிலோ கொண்ட கடலை எண்ணெய் ரூ. 53-க்கு விற்றது--இப்போது ரூ. 46-க்குக் குறைந்துவிட்டது.

இதேபோல், நல்லெண்ணெய் ரூ. 58-ஆக விற்றது---ரூ. 51-ஆகக் குறைந்துவிட்டது.

தேங்காய் எண்ணெய் ரூ 84-லிலிருந்து ரூ. 74-க்குக் குறைந்திருக்கிறது.

ரூ 250-க்கு விற்ற ஒரு குவிண்டால் கடலைப் பருப்பு இப்போது ரூ. 110-க்கு விற்கிறது. உளுந்து விலை குவிண்டால் ரூ. 145-ஆக விற்றது--இப்போது ரூ. 135-க்குக் குறைந்திருக்கிறது.

புதுவைக்கு

வழக்கறிஞர் சட்டம்

இந்தியாவின் 1961-ஆம் ஆண்டைய வழக்கறிஞர்கள் சட்டம், ஜுன் 10-ஆம் நாள் முதல் புதுவை மாநிலத்திற்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

புதுவை ஆளுநர் இதனை அறிவித்து, ஆணை பிறப்பித்துள்ளார்.

‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு’ என ஒப்புக்கொண்டவரை

இளைஞர் சமுதாயம் இன்று பதவியில் அமர்த்தியிருக்கிறது!

அரிய பண்பு படைத்த அண்ணாவை குற்றம் சொல்லத் துணிய முடியுமா?

இன்று ஒரு புதிய தலைமுறை செயலாற்ற முனைந்திருக்கிறது

அனுபவமுள்ளவர்களைக் கலந்தாலோசித்து பணிகள் பல ஆற்றவேண்டிய நாள் வந்துவிட்டது

“அண்ணாதுரை என்ற பண்புகள் படைத்த மனிதரை யாரும் குற்றம் சொல்லத் துணியமாட்டார்கள்! அரசு பற்றிய அனுபவமில்லாத அவர்கள், பதவிக்கு வந்து ஓராண்டுதான் முடிந்திருக்கிறது. எத்தனையோ ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையெல்லாம் காட்டி, ‘ஏன் ஓராண்டில் செய்யவில்லை’ என்று கேட்பது சரியல்ல!

“‘கட்சி’ என்று பாராமல், எதிர்க் கட்சியிலுள்ள திறமைசாலிகளையெல்லாம் -- அனுபவசாலிகளையெல்லாம் கலந்து உதவிபெற்றுக் காரியம் ஆற்ற வேண்டிய நாள் வந்துவிட்டது! அதை அண்ணாவால்தான் செய்ய முடியும். ஏனெனில், ‘மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு’ என்று ஒப்புக்கொள்ளும் ஒரு சிலரில் அவர் முதல்வர்!

“இன்று ஒரு புதிய தலைமுறை கிளம்பியிருக்கிறது! ‘செய்வார்’ என்ற நம்பிக்கையில் ஓர் இளைஞர் சமுதாயம் அவரைப் பதவியில் வைத்திருக்கிறது!”

வேறெந்தக் கட்சி அப்படிச் சாதித்தது!

“‘அமெரிக்காவில் அண்ணாதுரை’ என்று பக்கம் பக்கமாக எழுதியாகிவிட்டது; இனி ‘அண்ணாவைப் பற்றி’ என்று சில வரிகள் எழுதாவிட்டால், இந்தக் கட்டுரைத் தொடர் நிறைவு பெற்றதாகாது.

கடந்த முப்பதாண்டுகளாக அவர் செய்த பகுத்தறிவுப் பிரச்சாரமும், எழுதிய சீர்திருத்தக் கருத்துக்களும் அவர் பின் நிற்கின்றன.

‘தென்னிந்தியாவில் சமூகப் பிரச்சினைகள்’ பற்றி ஆராய்ந்துள்ள பேராசிரியர் டாக்டர் எல்டர் என்பவர், ‘அவரது (அண்ணாதுரையின்) கருத்துக்கள் மக்களிடம் தோற்றுவித்த மறுமலர்ச்சிக்கு இணையாக, இந்தியாவில் வேறெந்த கட்சியும் சாதிக்கவில்லை’ என்று எழுதுகிறார்.

நம்முடைய பரம்பரை அப்படிப்பட்டது!

அண்ணாதுரையின் உயர் குணங்களைப் பற்றிக் கதை கதையாக எழுதலாம். ஆனால் அண்ணாவை எப்படித் தொலைவிலிருந்து பார்ப்பது? அவரை எப்படி எடை போடுவது?— அது மிகவும் சிக்கலான காரியம். ஏனெனில், துதி பாடுவதிலேயே வளர்ந்துவிட்ட கதை நம் கதை! ‘ஆகா, ஓகோ’ என்றும், ‘இந்திரன் சந்திரன்’ என்றும் வர்ணித்துப் பழக்கப்பட்ட பரம்பரை நம்முடையது!

மிகப் பெரிய இதயம்!

இந்நிலையில், அண்ணாவை எப்படி எடை போடுவது?

அண்ணாவின் இலட்சியங்களுக்கு எதிராக இருப்பவர் யார்? தாம் விரும்பும் இடத்திற்குத் தமிழகத்தை அழைத்துச் செல்வதில் அண்ணாவுக்குக் குறுக்கே நிற்பது எது?

ஒரே வார்த்தையில் பதில் கூறுவோமானால், அவருடைய ‘இதயம்’ என்றுதான் கூற வேண்டும். அண்ணாவுக்கு மிகப் பெரிய இதயம் அமைந்திருக்கிறது!

அதனால்தான், ‘பஸ் தொழிலாளர்—மாணவர் சண்டை’ என்று சென்னையில் ஏற்பட்ட நிகழ்ச்சி, அவர் கண்ணீர்விடக் காரணமாக இருந்தது. அதனால், கடியவேண்டிய இடங்களில் கடியமுடியவில்லை! கண்டிக்க வேண்டிய இடங்களில் கண் கலங்குகிறார்!

அன்று பழமையைப் பரிகசித்தவர்; இன்று, பழமைக்குப் பாலம் கட்டுகிறார்! பழமையைப் பகைத்துக் கொள்ள விரும்பாத நிலை!—பெரிய இதயம்!

வயோதிக மனப்பான்மையை அன்று சாடிய அவர், இன்று நம் கல்விக் கூடங்களில் நிலவும் வயோதிக மனப்பான்மையையும், தேக்கத்தையும் கண்டும் காணாமல் இருக்க முயல்கிறார்!

மடங்கள் பற்றி அன்று புரட்சிக் கருத்துக்கள் தெரிவித்த அண்ணா, இன்று, ‘மடங்கள் மாறிவிட்டன’ என்று கூறுகிறார். போப்பாண்டவரைச் சந்தித்து, வாழ்த்துக் கோருகிறார்! பெரிய இதயம்--சந்தேகமில்லை!

சிரிக்கப் பேசுகிறார்-- சிந்திக்க வைக்கிறார்!

‘சிரிக்கப் பேசுகிறார்—சிந்திக்க வைக்கிறார்’ என்று கூறுகிறோம்; ஆனால், செயலாற்றுவதில் எவ்வளவு வலிமை—திறமை அவருக்கு உண்டு என்பது தெரியவில்லை! ஆண்டு ஒன்றுக்கு மேல் உருண்டோடிவிட்டது!

“நீங்கள் நிறையப் பேசியிருக்கிறீர்கள்; மக்கள் உங்களிடம் நிறைய எதிர்பார்க்கிறார்கள்; இன்று நீங்கள் செயலாற்றக் கூடிய நிலையிலிருக்கிறீர்கள்” என்று நான் கூறுகிறேன்.

“மக்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள்--அதுதான் பயமாக இருக்கிறது” என்கிறார் அண்ணா.

“தமிழ்நாட்டுக்கெனத் தனியே ஒரு திட்டக் கமிஷன் வேண்டாமா? அப்போதல்லவா ‘நமக்கிருக்கும் வசதிகள் என்ன? எதை ஐந்து ஆண்டுகளில் சாதிக்க முடியும்? எதை முன்னே சாதிக்க வேண்டும்’ என்று தெரிய வரும்?” என்று நான் கேட்கிறேன்.

அதற்கு அண்ணாதுரை, “நமக்கு ஒன்றும் ‘பிளானிங் கமிஷன்’ தேவையில்லை. எல்லா ‘ஐடியா’க்களையும் நாங்கள் பிரித்துத் தொகுத்து வைத்திருக்கிறோம். வேண்டியதெல்லாம் பணம்தான்” என்கிறார்!

அறிஞர் குழு யாருக்குத் தேவை?

“கென்னடி ஜனாதிபதியான போது ‘ப்ரெயின் டிரஸ்ட்’ என்ற ஒரு திறமை மிகுந்த சிந்தனைக் குழுவைக் கூட்டினார். அப்படிக் கூட்டியவர்களுக்குள் வந்தவர்கள்தான் ஹார்வர்டு பேராசிரியர் கால்பிரெய்த், மக் ஜார்ஜ் பண்டி, போர்டு கம்பெனியிலிருந்து வந்த மக்நமாரா, சரித்திரப் பேராசிரியரான ஸ்லீஷிங்கர். நீங்கள் வெறும் அதிகாரிகளை மட்டும் நம்பியிராமல், ஓர் அறிஞர் குழு அமைக்கவேண்டும்” என்றேன்.

“அறிஞர் குழு ந[illegible]க்கு வேண்டாம் -- மத்திய [illegible]சுக்குத்தான் வேண்டும்” என்கிறார் அண்ணா!

எண்ணத்தில்வயோதிகம் புகுந்துவிட்டதா?

தமிழ்நாட்டின் கல்வி நிலைபற்றிக் கேட்கும்போது, ‘மாணவர்களில் பலர், சொல்வதைக் கேட்காமல் நடந்துகொள்கிறார்கள்’ என்று வருத்தப்படுகிறார் அண்ணா.

‘ஏன் அப்படி? அவருக்கும் இளைஞர்களுக்கும் இடையில் இருந்த உறவு துண்டிக்கப்பட்டுவிட்டதா? அது தலைமுறை வித்தியாசமா? இளைஞர்களுக்காகப் பேசி, அவர்களை எழச் செய்தவரின் எண்ணங்களில் வயோதிகம் புகுந்துவிட்டதா?—இப்படிப் பட்ட சந்தேகங்கள் நம் மனத்தில் எழுகின்றன.

நமக்குப் புரியாத புதிராக இருக்கிறது’

“கல்வி நிலை மாற, தூங்கும் கல்வி முறையை அல்லவா குற்றக் கூண்டில் ஏற்றவேண்டும்? காலத்துக்கு ஒவ்வாத கல்வி முறையை மாற்றி அமைக்க எங்கே திட்டம்” என்று கேட்கத் தோன்றுகிறது.

“‘நமது மக்களின் மனோபாவம்தான் நம் முன்னேற்றத்திற்கு எதிராக இருக்கிறது. பொதுவாக நாம் சோம்பேறிகள்; நேரத்திற்கு மதிப்புக் கொடுக்காதவர்கள்; சுலப வேலைக்கு நிறைய ஊதியத்தை எதிர்பார்ப்பவர்கள்; கீழே இருப்பவர்களிடம் அதிகாரத்தைக் காட்டுவோம்; மேலே இருப்போரிடம் பயந்து சாவோம்’ என்றெல்லாம் கன்னார் மிர்டால் என்ற சுவீடிஷ் நிபுணர், பத்து ஆண்டுகள் ஆராய்ந்து, ‘ஆசிய நாடகம்’ என்ற மூன்று வால்யூம் புத்தகம் எழுதியிருக்கிறாரே -- பார்த்தீர்களா?” என்று கேட்டேன் அண்ணாவை.

“அதை வாங்கிப் படித்தேன்; மறைமலை அடிகள் முன்பு ‘அறிவுரைக் கொத்து’ என்று ஒரு நூல் எழுதினார்; இதையேதான் அவர் அன்று எழுதினார். அப்போது அதற்கு நிறைய எதிர்ப்பு இருந்தது. மாணவராய் இருந்த நாங்கள் எல்லாம் அப்போது, ‘நம்மிடம் குறைகள் உள்ளன; ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்’ என்று கூறினோம்; அதைப் படித்துப் பாருங்கள்!” என்றார் அண்ணா.

“அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?”

“என்ன செய்வது?”

“பிரசாரம்” என்கிறேன் நான்.

“அதைத்தான் செய்ய வேண்டும்” என்கிறார் அண்ணாதுரை.

அண்ணாவின் பேச்சுக்களைக் கூர்ந்து கவனித்தால், ஒன்று தெளிவாகப் புரிகிறது. பல பிரச்சினைகளைக் குறித்து ‘ஏன்?’ என்பதற்கு அண்ணா அழகாக விளக்கம் தருகிறார்; ஆனால், ‘அதற்கு என்ன செய்வது?’ என்பது பற்றி அவர் ஏன் அதிகம் பேசுவதில்லை என்பது நமக்குப் புரியாத [illegible]ராக இருக்கிறது.

பேசிப் பேசியே, மேடைப் [illegible]சாளராக விஷயங்களை விள[illegible]கியே வளர்ந்துவிட்ட வழக்கமா? அல்லது பதவிக்குப் புதிது என்பதால் ஏற்படும் இயற்கையான தயக்கமா? அல்லது, பிரச்சினைகளை அவர் அணுகும் விதமே அப்படித்தானோ?

அவரது அமெரிக்க விஜயம் முடிந்ததும், நம்முன் பல சந்தேகங்கள் எழுகின்றன. ‘பத்தாயிரம் மைல்களைக் கடந்து இவ்வளவு தொலைவு வந்த அவர், ஏதாவது குறிப்பான திட்டங்களை மனத்தில்எண்ணி வந்தாரா? பேசி சாதனை கண்டாரா?

“சி[illegible] உதவிகள் தரமுடியு[illegible]ான் நான் வரமுடி[illegible]று நிபந்தனையிட்டு, [illegible]ாதித்துக் கொண் [illegible] கூடியவற்றைச் [illegible]துக் கொண்டாரா? உலக பாங்கியிலும், ஐ நா.-விலும் தமிழ் நாட்டுக்கு என்றும் இல்லாத வாய்ப்பும் வசதியும் இன்று இருப்பதை உணர்ந்து, பயன் கண்டாரா?—நாமறியோம்! அவர் சாதித்திருக்கக் கூடும் என்றே நம்புவோம்!

எம். எஸ். உதயமூர்த்தி
(‘ஆனந்த விகடன்’ இதழில்)

தென்காசித் தொகுதி வாக்காளர் பட்டியல்

திருத்தம் விழைவோர் கவனிக்க:

தென்காசி மன்றத் தொகுதி வாக்காளர் பட்டியல் இறுதியாக வெளியிடப்பட்டு நடைமுறைக்கு வந்திருக்கிறது

இறுதிப் பட்டியலை, திருநெல்வேலி வாக்காளர் பதிவு அதிகாரியின் அலுவலகத்தில் பொதுமக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கின்றன.

வாக்காளர் பதிவு அதிகாரியின் அலுவலகத்திலிருந்து, வாக்காளர் பட்டியல் சம்பந்தமான முழு விவரங்களையும்பெற்றுக்கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியல் சரியானதாக இருக்கத் தேர்தல் அதிகாரிகள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டுள்ளனர்; எனினும், சில வாக்காளர்களைப் பொறுத்துத் தவறான தகவல்கள் இடம் பெற்றிருந்தால், அவற்றைத் திருத்தக்கோரி வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்; அவர் விசாரித்து, அவசியமான திருத்தங்களைச் செய்வார்.

தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒருவர், அதே தொகுதியில் வேறொரு இடத்திற்குப் பெயர் மாற்றக் கோரி வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்; இதற்கென நிர்ணய நமூனா ஏதுவும் இல்லை. வாக்காளர் பதிவு அதிகாரி விசாரித்து, தக்க திருத்தங்களைச் செய்வார்.

பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒருவரின் பெயரை ஆட்சேபித்து, நமூனா 7-ல் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

வாக்காளராகத் தகுதியுள்ளவரின் பெயர் விடுபட்டிருந்தால், அவரது பெயர் இப்பொழுதுகூட பிரிவு 23-ன் கீழ்ப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படலாம். இதற்கு நமூனா 6-ல் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஒரே தொகுதியில் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பெயர் மாற்றக் கோரும் விண்ணப்பம் தவிர்த்த மற்ற எல்லா விண்ணப்பங்களும் நிர்ணய நமூனாவில் அளிக்கப்பட வேண்டும். வாக்காளர் பதிவு அதிகாரி, (தென்காசி, செங்கோட்டை) தாசில்தார் அலுவலகங்களில் அச்சிட்ட நமூனாக்கள் கிடைக்கும்.

அச்சிட்ட நமூனாக்களில்தான் விண்ணப்பிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நிர்ணய வடிவில் டைப் செய்யப்பட்ட — சைக்ளோஸ்டைல் செய்யப்பட்ட — அல்லது கையால் எழுதப்பட்ட விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பத்திற்குரிய கட்டணம் 50-காசு. விண்ணப்பத்துடன் இந்த மதிப்புக்கு ‘நான்-ஜூடிஷியல் ஸ்டாம்பு’ ஒட்டவேண்டும். இந்த ஸ்டாம்பு கிடைக்காத இடங்களில்: அதே மதிப்புக்கு ‘நான்-ஜூடிஷியல்’ காகிதத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

சுயநலக்காரர்களின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்குத் திட்டம்

'சமூகவிரோதி'களின் தன்னலப்பிடியிலிருந்து கூட்டுறவு இயக்கத்தை விடுவிக்க முயற்சி

இடைத் தரகர்கட்கு இடமளிப்பதைத் தடுப்பதற்குச் சட்டம் உருவாகும்-- போலிச் சங்கங்களைக் கலைப்பதற்குப் போதிய அதிகாரம் தரப்படும்

கடனுதவிக் கொள்கையில் நிலவும் கடுமை குறையும் --- முதலமைச்சர்கள் மாநாட்டு முடிவுகள்

சென்னை, ஜூன் 12—

பெரும் அளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ள கூட்டுறவு இயக்கத்தை உறுதிப்படுத்தி—அவசியமான இடங்களில் அதற்குப் புது விறுவிறுப்பு ஊட்டி—பயிற்சி பெற்ற நிர்வாகிகள், ஊழியர்கள் ஆகியோரைக் கொண்டு அதைப் பலப்படுத்துவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுப்பதென மாநில முதலமைச்சர்கள் முடிவு செய்தனர்.

சுயநல உரிமையாளர்கள், கூட்டுறவு இயக்க விரோதிகள் ஆகியோர் பிடியிலிருந்து இந்த இயக்கத்தை விடுவிப்பது—கூட்டுறவு சங்கங்களின் கணக்குகளை இலாகா மூலமாகவும், பிற வழிகளிலும் தணிக்கை செய்வது—ஆகியவை சம்பந்தமாகவும் சில முடிவுகள் செய்யப்பட்டன.

கூட்டுறவு இயக்கம் நன்கு நிலை பெறாத இடங்களில், பிரைமரி சங்கங்களுக்கும், மத்திய சங்கங்களுககும் விரைவில் விறுவிறுப்பு ஊட்டவேண்டும் என்றும், கூட்டுறவு வசதிகள் போதிய அளவு இல்லாத இடங்களில் விவசாயக் கடன் வசதிக் கார்ப்பரேஷன் போன்ற மாற்று வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்களின் இம் மாநாட்டில் எடுத்த முடிவுகளில் சில வருமாறு :—

"உற்பத்தித் திட்டங்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அளிக்கப்படும் உதவி போதிய அளவுள்ளதாக இருக்கவேண்டும்.

சிறிய விவசாயிகளுச்கும், வசதி குறைந்தவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படக்கூடியதாகச் செய்யும் வகையில் மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டும்.

கடன் வழங்குவதற்குச் சொத்துக்களை அடிப்படையாகக் கொள்வதற்குப் பதிலாக, இந்தக் கடன் உதவியால் உற்பத்தி எவ்வளவு பெருகும்—கடனைத் திருப்பித் தருவதற்கான சக்தி எவ்வளவு அதிகரிக்கும்—என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்; இப்படிச் செய்தால் கடன் கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதி திரும்பி வராமல் போகும் அபாயமும் இருக்கிறது; இதை மத்திய அரசும், மாநில அரசும் ஏற்க வேண்டும்.

உரிய நேரத்தில் சிரமமின்றிப் போதிய கடன் வசதி கிடைக்கச் செய்வதற்காகக் கடனுதவிக் கொள்கை— நடை முறை — கடனுதவி வரம்பு ஆகியவற்றில் கடுமையைக் குறைக்க வேண்டும்.

சுயநல உரிமையாளர்களின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்காகப் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

லேவாதேவிக்காரர்கள், வியாபாரிகள், இடைத் த[illegible] ஆகியோரைக் கூ[illegible] கங்களில் உறுப்[illegible] சேர்த்துக்கொள்ள[illegible] அவசியமானால், இதற்காகச் சட்டம் இயற்ற வேண்டும்.

சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் சிறிய விவசாயிகளுக்கும், வசதியற்ற பிரிவினருக்கும் இடங்கள் ஒதுக்கவேண்டும்.

ஒருவர் ஒரே நிறுவனத்தில் இரண்டு முறைக்குமேல் பதவி வகிப்பதையும், ஒரே சமயத்தில் இரண்டு நிறுவனங்களுக்குமேல் பதவி வகிப்பதையும் கட்டுப்படுத்த வேண்டும்.

சங்க நிர்வாகிகளுக்குக் கடனுதவி அளிப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

அதிகாரிகள் மேற்பார்வையில் தேர்தல்களை ஒழுங்காக நடத்த வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்திலுள்ள கடனுதவிச் சங்கங்கள், நில வளர்ச்சிப் பாங்கிகள், மார்க்கெட்டிங் சங்கங்கள், பண்டகசாலை சங்கங்கள் ஆகிய நான்கு பிரிவுகளில் முக்கியமான பணிகளுக்குப் பொதுவான சிப்பந்திகள் பிரிவு ஒன்றை ஒவ்வொரு மாநிலமும் உருவாக்க வேண்டும்.

கூட்டுறவுக் கடன் வசதிக்கான தொகைகள் அதிகரிக்கப்பட வேண்டும்; உதாரணமாக சர்க்கரை ஆலைகள், மார்க்கெட்டிங் சங்கங்கள் போன்றவை, உற்பத்தி பணிகளுக்காகத் தனது உறுப்பினர்களுக்குக் கடன் வசதி அளிப்பதை அனுமதிக்க வேண்டும்.

தற்போது சங்கங்கள் வைத்துக் கொண்டிருக்கும் அதிகப் பற்றுக்களின் அளவைக் குறைத்துக்கொள்ள மனப்பூர்வமாக முயலவேண்டும்.

கூட்டுறவு இயக்க நிறுவனங்களுக்கும், பஞ்சாயத்து ஆட்சி முறை அமைப்புக்களுக்கும் இடையில் இணைப்பு ஏற்படுத்த (பரஸ்பரம் பிரதிநிதித்துவம் அளிப்பதன்மூல) விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கூட்டுறவு இயக்கச் சிப்பந்திகளுக்குப் பயிற்சி அளிக்கவும், பொருளறிவு அளிக்கவும் வேலைத் திட்டமொன்று வகுக்கப்படவேண்டும்.

போலிச் சங்கங்களைக் கலைப்பதற்குக் கூட்டுறவு ரிஜிஸ்திராருக்குப் போதிய அதிகாரம் அளிக்கவேண்டும்; இதற்கான நடைமுறைகள் இலகுவாக்கப்பட வேண்டும்.

பம்பு செட்டுகள் வைப்பதற்காக அளிக்கப்படும் கடனுதவியை, உற்பத்திக்கான கடனுதவித் திட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும்.

அரசுத் துறை நிறுவனங்கள் ஏஜெண்டுகள் தரும் துறையில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை தரவேண்டும்.

லாகாமல் நிற்கும் கடன் பாக்கிகள்.

கடன் பாக்கிகளை மனநிறைவுள்ள அறுவடைக்குப் பிறகும் கூட நியாயமான அளவுக்குக் கட்டுப்படுத்தாவிட்டால் கிராம மக்களுக்கு மேலும் அதிகக் கடன் வசதி அளிப்பது எப்படி என்பது விளங்கவில்லை.

இடைத் தேர்தல் நிதி

சேலம் மாவட்ட நிகழ்ச்சிகளில் அளிக்கப்பட்ட நிதி

அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், ஜூன் 6, 7, 8 ஆகிய நாட்களில் சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது ஆங்காங்கு தோழர்களாலும், அமைப்புகளாலும் அளிக்கப்பட்ட பொருள்களை ஏலம்விட்ட வகையிலும், நிதியாகவும் அளிக்கப்பட்ட வகையிலும் கிடைத்த இடைத் தேர்தல் நிதி விவரம்:—

	ரூ.காசு
ஆர். விரப்பன்	120 00
ஆர். வீரப்பன்	10 00
அண்ணாமலை	1 00
கந்தசாமி	10.00
சுப்பிரமணியம்	5 00
கோவிந்தசாமி	10.00
பேரமலூர் எம். ஜி. ஆர். மன்றம்	2 10
ஈ ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ.	60 00
பண்டரிநாதன்	85 00
ஆறுமுகம் எம்.எல்.ஏ.	80.00
செங்கா கவுண்டர்	21 00
சே. பி கந்தசாமி	100 00
கபிலர்மலை விவசாயிகள் சங்கம்	100.00
வேலாயுதம்	1.00
செகநாதன்	2 00
கொண்டலம் தி மு.க. கிளை	5 00
பி. பி சரு பண்ணன்	125 00
ஜோடர்பாளையம் பொன்னுசாமி	120 00
சுப்பையன்	101.00
கொதலம் எம்.ஜி ஆர். மன்றம்	2.00
பகுத்தறிவு மன்றம் கணேசன்	10 00
பாலப்பட்டி தி. மு க. கிளை	2 00
தேலூர் தி. மு. க. கிளை	10 00
மோகனூர் பி. அருணகிரி	75.00
,, பி. கன்னையன்	51.00
,, இராதா	25 00
,, ரங்கசாமி படையாச்சி	100 00
முஸ்லிம் ஜமாத்	101.00
ஆக மொத்தம்	1 324.10

இலண்டனில் கைதான....

நீக்ரோ தலைவரைக் கொன்ற கொடியவன்

தன்னிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா கேட்கிறது

வாஷிங்டன், ஜூன் 13—

நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர் கிங் கொலையில் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் பிரிட்டனில் சிறைப் பிடித்து வைக்கப்பட்டுள்ள ஜேம்ஸ் ஏர்ள் ரே என்பவரைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு அடுத்த சில நாட்களுக்குள் அமெரிக்கா கேட்கக்கூடுமாம்.

சென்ற ஆண்டு சிறையிலிருந்து தப்பியோடிய மற்றொரு குற்றத்திற்காக மிசோரி மாநிலமும் அவரைத் தேடி வருகிறது. அப்போது கொள்ளையடித்ததற்காக அவர் 20 ஆண்டு சிறைத் தண்டனை அனுபவித்து வந்தார்.

ரேமான் ஜார்ஜ் ஸ்னெய்டு என்ற பெயரில் பயணம் செய்துவந்த எதிரி, இலண்டன் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். பெல்ஜியம் நாட்டிலுள்ள பிரசல்ஸ் நகருக்குச் செல்வதற்காக அவர் காத்துக்கொண்டிருந்தார்.

கடந்த திங்களன்று எதிரி, இலண்டன் நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டார். குண்டு போட்டிருந்த கைத்துப்பாக்கி ஒன்றைச் சட்ட விரோதமாக வைத்திருந்ததாகவும், போலிப் பயணப் பத்திரம் வைத்திருந்ததாகவும் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யபட்டன; பொறுப்பில் விடுவிக்காமல் எதிரியை சிறையில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. 'எனக்கு வழக்கறிஞர் இல்லை' என்று எதிரி தெரிவிக்கவே அவருக்கு நீதிமன்றம் சட்ட உதவி அளித்தது.

பிரிட்டனுடன் செய்து கொண்டுள்ள நாடு கடத்தல் ஒப்பந்தத்தின்கீழ், ஒரு ஆசாமியை அமெரிக்காவுக்குத் திருப்பியனுப்புமாறு கேட்பதாயின், பிரிட்டனிலுள்ள ஒரு நீதிபதி முன்னிலையில், 'பிடி' உத்தரவும், 'எதிரிதான் குற்றம் செய்தவர்' என்பதற்குச் சான்றுகளும் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

உற்பத்தி பெருக வலிவுமிக்க நடவடிக்கை அவசியமாகும்

தீவிரமாகச் சிந்தித்துப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவது முக்கியம்

குறைகள்மேலோங்கினுல் உருவாகியுள்ள நன்மைகளுக்குத் தீமைகள் ஏற்படும்

கூட்டுறவுத் துறையின் பெரும் பொறுப்பு--- மத்திய உணவு அமைச்சரின் விளக்கம்

சென்னையில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், கூட்டுறவுத் துறைமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட மத்திய உணவு-விவசாய-கூட்டுறவுத் துறை அமைச்சா செகசீவன்ராம அவர்கள், விரிவாக வளர்ந்துவரும் கூட்டுறவு இயக்[illegible]த்தின் கடமைகளை நினைவுறுத்தி ஆற்றிய உரையின் பிற்பகுதி [illegible]றது :—

[illegible]லுப்படுத்தப்பட்ட நடவடிக்கை அவசியம்

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் கூட்டுறவு இயக்கத்திற்குப் பெரும் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குக் கடன் வசதி செய்து வருவதுடன், உரம் முதலியவற்றை வழங்கவும், விவசாய விளைபொருள்களை விற்பனை செய்ய உதவி செய்வதும் கூட்டுறவு அமைப்புக்களின் பொறுப்புகளாகியுள்ளன. விவசாய உற்பத்தி பெருக இந்த நடவடிக்கைகளை வலுப்படுத்துவது அவசியமாகிறது.

குறைகள் மேலோங்கி நன்மைகளை அழிக்கும்!

கடந்த 15 ஆண்டுகளில் கூட்டுறவு இயக்கம் வெகுவாக விரிவடைந்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் வழங்கப்படும் குறுகியகாலக் கடன் தொகை ரூ. 22-கோடியிலிருந்து ரூ. 400 கோடியாகவும், நீண்டகாலக் கடன் ரூ. 1-கோடியிலிருந்து ரூ. 80-கோடியாகவும், கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விற்பனை செய்யப்படும் விவசாயப் பொருள்களின் மதிப்பு ரூ 47-கோடியிலிருந்து ரூ. 400-கோடியாகவும் அதிகரித்துள்ளது.

ஆண்டொன்றுக்கு 15 முதல் 20 சதவிகித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்தத் துரித வளர்ச்சியால் பல பிரச்சினைகளும், சிரமங்களும் ஏற்பட்டிருக்கின்றன. வளர்ச்சி வேகத்தை மட்டுப்படுத்துவதால் இப்பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்; ஆனால், விவசாய வளர்ச்சிக்கு வேக வளர்ச்சி அவசியமாக உள்ளது; ஆகவே நாம், தீவிரமாகச் சிந்தித்து, பிரச்சினைகளுக்குத் தகுந்த பரிகாரம் தேடினாலன்றி, குறைகள் மேலோங்கி கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளை அழித்துவிடும்.

கூட்டுறவாளர்களை எதிர்நோக்கும் முக்கியப் பிரச்சினை, வசூ

எந்தக் கோணத்தில் நிர்ணயம் செய்வது?

கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நோக்கம், சொற்ப சொத்துள்ள--ஆனல் கடனைத் திருப்பித் தரக்கூடிய சாதாரண நபருக்கு உதவுவதுதான். கூட்டுறவு இயக்கம் சாதாரண நபருக்குப் பயன்படுவதில்லை என்ற புகார் பரவலாக உள்ளது.

புதிய விவசாய முறைகள் கையாளப்படும் இந்நாளில் 2 ஏக்கர்கள் நிலம் உள்ள சிறிய விவசாயிகூட—வசதிகள் தரப்பட்டால்—கணிசமாக சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது.

அதிகப்படி மூதலீட்டின் மூலமாகப் பலமில்லாத விவசாயிக்குப் பொருளாதார வலு ஏற்படுகிறது. ஆகவே, ஒரு விவசாயிக்குக் கடன் தரலாமா என்பதை, 'அவனது நிலத்தை விற்றால் எவ்வளவு கிடைக்கும்' என்ற கோணத்தில் அல்லாமல், 'அவனுக்குச் சரியாக உதவினல் அவனல் எவ்வளவு உற்பத்தி செய்யமுடியும்' என்ற கோணத்தில் அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும்.

ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தப் புதிய கோணத்திற்கிணங்க கூட்டுறவுப் பாங்கிகளும், பிரைமரி சொசைடிகளும் செயல்படவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

வேதனை தரும் செய்தி:

இரண்டாவது நாளாகச் சென்னையில் தீ விபத்து

இரண்டு இடங்களில் ஏற்பட்டது

சென்னை, ஜுன் 14—
சென்னையில் நேற்றும் இரண்டு இடங்களில் தீ விபத்துக்கள் ஏற்பட்டு பெருஞ் சேதத்தை விளைவித்துள்ளன.

நேற்றைக்கு முன்னாள் தீ விபத்து ஏற்பட்ட பகுதியிலேயே நேற்றும்—அதே நேரத்தில் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. வியாசர்பாடி மோகன முதலித் தோட்டத்தில் ஏற்பட்ட இந்தத் தீ விபத்தில் சுமார் 500 வீடுகள் எரிந்து சாம்பலாயின.

தொழிற்சாலையில்

கிண்டியில் உள்ள ஓல்டாம் தொழிற்சாலையில் நேற்று இரவு 9 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டு கடும் சேதம் விளைவித்திருக்கிறது.

மின்கலம் (பாட்டரி) தயாரிக்கும் இத்தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்துக்குக் காரணம் தெரியவில்லை. இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புக்குச் சேதம் இருக்கும் என்று கூறப்படுகிறது.

வியாசர்பாடிப் பகுதியில் தீ விபத்து ஏற்பட்ட இடத்துக்கு, அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், சாதிகபாட்சா, மேயா டாக்டர் அபிபுல்லாபேக் ஆகியோர் சென்று பார்த்து பாதிக்கப்பட்டவர்கட்கு ஆறுதல் கூறினர்.

மற்றும் மாநகராட்சி உறுப்பினர்களும், கழகத் தோழர்களும் துயர் துடைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சிரணியினருக்கு அழைப்பு

சென்னையில் தீ விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் பணிகளில் ஈடுபடுமாறு, சென்னைச் சீரணித் தொண்டர்கட்கு, சீரணி அதிகாரி திரு பரமசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சீரணித் தொண்டர்கள், தங்கள் தொகுதித் தலைவர்களோடு தொடர்பு கொண்டு — திட்டம் வகுத்துக்கொண்டு-துயர் துடைப்புப் பணிகளில் உடனடியாக ஈடுபடுமாறு அவர் தமது அறிக்கையில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

திருச்சி நகரில் கழக நிகழ்ச்சிகள்

திருச்சி நகரில் நடைபெறவிருக்கும் கழகக் கூட்டங்கள்—கலை நிகழ்ச்சிகள்பற்றிய விவரங்களை, திருச்சி நகர தி. மு. க. செயலாளர் அ. நடராசன் அவர்கள், பின்வருமாறு அறிவிக்கிறார்:—

கலை நிகழ்ச்சிகள்

15—6—68-ல், 5-வது வட்டம் தென்னூரிலும்; 16—6—68 ல், 33-வது வட்டம் முதலியார் சத்திரத்திலும்; 18—6—68-ல், பேட்டவாய்த்தலையிலும்; 19—6—68-ல் திருவரங்கத்திலும்—சிவகங்கை சேதுராசனின் கலா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பொதுக்கூட்டங்கள்

15—6—68-ல், 14-வது வட்டம் ஆண்டார் வீதியில் வி. எஸ். கோவிந்தராசன் எம். எல். ஏ. பேசுவார்.

16—6—68 ல், 15-வட்டம் உறையூரில் வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ. பேசுவார்.

17—6—68-ல், 13-வது வட்டம் வன்னிமரத்தடியில் கேரள சுந்தரம் பேசுவார்.

30-வது வட்டம் துரைசாமி புரத்தில் மணி—சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

22—6—68-ல், 25-வது வட்டம் தஞ்சை ரோடில் ஜீவா கலைமணி பேசுவார்.

23—6—68-ல், 31-வது வட்டம் செங்குளம் திடலில் கோவை செழியன் பி.ஏ. பேசுவார்.

30—6—68-ல், 28-வது வட்டம் ஜெயில் தெருவில் க. இராசா முகமது பி.ஏ. பேசுவார்.

31-வது வட்டம் எடத் தெரு ரோடில் யூ. ஆர். ஜீவரத்தினம் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

பொதுக்கூட்டங்களிலும், கலா நிகழ்ச்சிகளிலும், நகரச் செயலாளர் அ. நடராசன், எம். எஸ் மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள் கலந்து கொள்வர்.

மாநகராட்சி ஊழியர்கட்கு பஞ்சப் படி உயர்வு

சென்னை, ஜுன் 13—
அண்மையில் தமிழக அரசு ஊழியர்களுக்கு ஜுன் திங்கள் முதல் நாள் முதல் அளிக்கப்பட்டுள்ள பஞ்சப் படிக்கு ஈடாக சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கும் அளிக்கவேண்டும் என்ற மாநகராட்சிமன்ற முடிவினை தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஆனால், 'பஞ்சப் படி அளிப்பதற்கு ஆகின்ற செலவினை மாநகராட்சி நிதியிலிருந்தே அளிக்க வேண்டும்' என்று தமிழக அரசு சென்னை மாநகராட்சிக்குத் தெரிவித்திருக்கிறது.

இப்பஞ்சப் படி உயர்வு மாநகராட்சி ஆசிரியர்களுக்குப் பொருந்தும் என்று அரசின் உத்தரவு மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

பி.யு.சி. தேர்வு முடிவுகள்

சென்னை, ஜுன் 14--
இவ்வாண்டு 'ஏப்ரல் திங்களில் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகப் பி. யு. சி, தேர்வு முடிவுகள், ஜுன் 15-ம் நாள் பிறபகல 2-மணிக்கு பல்கலைக் கழகக் கட்டிடத்தில் வெளியிடப்படும்.

ஔவை சண்முகத்திற்குப் பாராட்டு

சென்னை-திருவல்லிக்கேணி நடராசா கல்விக் கழகத்தின் சார்பில் நடிகர் ஔவை டி. கே. சண்முகத்துக்குப் பாராட்டு விழா; 15-6-68 மாலை 6-30 மணிக்கு; தலைவர்: எஸ். டி. சுந்தரம்; பேசுவோர்: எஸ். வி. சகஸ்ரநாமம், என். என் கண்ணப்பா, சச்சிதானந்தம் பிள்ளை, நாரணதுரைக்கண்ணன், ஆர். இராசரத்தினம் அம்மையார்.

காதணி விழா

புதுக்கோட்டை 30-வது வட்ட தி. மு. க. துணைச் செயலாளர் எம். பாட்சா அவர்களின் குழந்தைகளான ஹசீனு பேகம், ஷகீலா பேகம் ஆகியோருக்குக் காதணி விழா, 16-6-68 மாலை 3 மணிக்கு; மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம், மற்றும் மாவட்ட, கழக முக்கிய தோழர்கள் பலரும் வாழ்த்துரை வழங்குவர்.

திருமணம்

செல்வன்: பொ.ம. குப்புசாமி—செல்வி: இரா. கலைவாணி திருமணம், 16—6—68 மாலை 6-மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டை அம்மன் கோயில் தெரு டி. டி. வி. உயர்நிலைப்பள்ளியில் புலவர் தணிகை உலகநாதன் தலைமையில் நடைபெறும்; பலர் வாழ்த்துரை வழங்குவர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

15--6--68

பெங்களூர்

12-வது வட்ட தி. மு. க. சார்பில் மறைந்த தோழர் மு. அன்பழகன் குழந்தைகள் கல்வி நிதியளிப்புக் கூட்டம்; மாலை 6 மணிக்கு 12-வது வட்டம முதல் வீதியில்; தலைவர்: அ. சாமிதுரை; பேசுவோர்: எஸ். நாராயணன், சிவசங்கரன், இராமசாமி, த. அறவாழி, ஆர். டி. இரங்கநாதம்; நிதி வழங்குபவர்: திராவிடமணி.

16--6--68

திருவரங்கம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு திருவானைக்காவல் நெல்சன் ரோடில்; தலைவர்: எஸ். ஜெயவடிவேலு; பேசுவோர்: எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., எஸ். நெடுமாறன், எஸ். எம். வி. சாமி, மு. நடராசன், ஆ. பொன்னுசாமி.

விழுப்புரம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு நரசிங்கபுரத்தில்; தலைவர்: ஆர். கே. பெருமாள்; பேசுவோர்: தமிழ்மாறன், எம். சண்முகம் எம். எல் ஏ., ஆர். கே. மூர்த்தி. மற்றும் பலர்.

தேங்காய்த்திட்டு

தி. மு. க. ஆண்டு விழா; மாலை 6-30 மணிக்கு பள்ளத் தெரு பிள்ளையார் கோயில் எதிரில்; தலைவர்: இரா. சண்முகம்; பேசுவோர்: அமுதாராகவன். எம். ஏ. சண்முகம், சி. பி திருநாவுக்கரசு பி.காம்., பி.எல்., எம். சுதானந்தம் பி.எஸ்.சி., பி.எல்., சி. என். பார்த்தசாரதி, எஸ். தேவராசன். (காலை 9-மணிக்கு இரா. மாணிக்கசாமி தலைமையில் செ. முத்து, கோ. புகழேந்தி ஆகியோர் பேசுவர்).

தென்காசி தொகுதியில்

கல்வி -- தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

கல்வி -- தொழில் அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் அவர்கள், ஜுன் 16, 17, 18-ஆகிய நாட்களில் தென்காசித் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்து, இடைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில கலந்துகொள்வார்.

உணவுத் துறை அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், ஜுன் 15-ஆம் நாள் பிற்பகல் 2-15 மணிக்கு விமானம் மூலம் சென்னையிலிருந்து கோவை செல்கிறார்; அங்கிருந்து மறுநாள் காலை 9-மணிக்கு [illegible] புறப்பட்டு அமராவதி செல்கிறார்; அன்று மாலை 8-30 மணிக்கு உடுமலை கூட்டுறவு நகர பாங்கியின் பொன் விழாவில் கலந்துகொண்டுவிட்டு, 17—6—68 அன்று சென்னை வந்தடைவார்.

பெங்களூரில் யூ. ஆர். ஜீவரத்தினம் இசை நிகழ்ச்சி

பெங்களூர் 14-வது வட்டம் இலச்சுமணபுரி தி. மு. க. சார்பில் வள்ளுவர் மன்றக் கட்டிட நிதிக்காக 16—6—68 பிற்கல் 12 மணியளவில், சுபாஷ் நகர் ஈரன்ய மித்திர மண்டலி அரங்கில் இசைக்குயில் யூ. ஆர். ஜீவரத்தினம் குழுவினரின் இசை நிகழ்ச்சி கருநாடக மாநில தி மு க. அமைப்பாளர் தி திராவிடமணி தலைமையிலும்—ஓவியா கும்பலிங்கம் முன்னிலையிலும் நடைபெறும்.

உற்பத்தி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய விவசாயிகளுக்கும், கைவினை ஏர்களுக்கும் இப்போதுள்ள கூட்டுறவு சங்கங்களால் உதவிபுரிய முடியவில்லை என்றால், அவர்களுக்காக தனிக் கூட்டுறவுகளை ஏற்படுத்துவது பற்றி ஆலோசிப்பது அவசியம்."

அமைப்புகள் உருவாகின்றன!

திறமையில் கவனம் செலுத்தப்படவில்லை

மத்திய அரசின் உணவு—விவசாய—சமுதாய வளர்ச்சி—கூட்டுறவுத் துறை துணை அமைச்சர் எம். எஸ். குருபாதசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை எய்தும் முயற்சியில் புதிய அமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறதே தவிர, அவற்றின் திறமையில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை; இதன் விளைவாக, கூட்டுறவுத் துறையின் சாதனை, புள்ளிவிவர மட்டத்தில் பிரமாதமாகத் தோன்றினாலும், உயரிய கூட்டுறவு இலட்சிய உணர்வு போதிய அளவு பிரதிபலிக்கவில்லை.

பலதரப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் பெருகியுள்ளனவே தவிர, அவற்றில் பெரும்பாலானவை பொருளாதார ரீதியில் கட்டுப்படியானவையல்ல.

கூட்டுறவு இயக்கத்தின் பலமுனை வளர்ச்சிக்கு ஏற்ற நிர்வாக--மேற்பார்வை அதிகாரிகள் அமைப்பு உருவாகவில்லை.

இந்தக் குறைபாடுகளின் விளைவாகக் கூட்டுறவு சங்கங்கள் அரசாங்க உதவியை நம்பியிருக்கும் நிலை இருக்கிறதே தவிர, சுய பலமுள்ளதாக இல்லை."

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன் தொகையின் பெரும் பகுதி, அதிக வருமானமுள்ள விவசாயிகளுக்கே போய்ச் சேருகிறது என்று கூறப்படும் புகாரைக் குறிப்பிட்டு, அதற்கு விளக்கம் தரும் வகையில் அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"விவசாயக் கடன் முறை, நாட்டில் உள்ள நில உடைமை முறையைப் பொறுத்தே இருக்கும்.

நம் நாட்டின் நில உடைமை முறை சிறிய விவசாயிகளுக்குச் சாதகமாக இல்லை. மேல்தளத்தில் உள்ள 6.4-சதவிகித சாகுபடியாளர்களிடம் 22.4-சதவிகித நிலம் இருக்கிறது; அடிமட்டத்தில் உள்ள 16-சதவிகிதத்தினரிடம் 4 6-சதவிகித நிலம்தான் இருக்கிறது; இதனால், உற்பத்தியுடன் இணைக்கப்படும் கடன் முறையில் பெரிய விவசாயிகளுக்குத் தரப்படும் கடன் தொகை அவர்களது எண்ணிக்கை அடிப்படையில் சேரவேண்டியதைவிட மிக அதிகமாக இருப்பது இயற்கையேயாகும்."

பொதுநலத் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா சுற்றுப்பயணம்

ஜுன் 15 காலை 10-30 மணி; வீராணம் ஏரி ஆயக்கட்டு பகுதியில் ஏ. டி டி. 27' ரக விதை சாகுபடி ஆரம்பித்து வைத்தல்; பிற்பகல் 1-மணி: சேத்தி[illegible] தோப்பு; இரவு 8-மணி: உ[illegible] மலைப்பேட்டை.

ஜுன் 16 காலை 11-மணி: அமராவதி — விருந்தினர் விடுதியில் பொதுமக்களைச் சந்தித்தல்; பிற்பகல் 3-30 மணி: உடுமலைப் பேட்டை—கூட்டுறவு வங்கியின் பொன் விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்; இரவு 7-மணி: பொள்ளாச்சி பொது மக்கள் வரவேற்பு.

ஜுன் 17, 18: உடுமலைப்பேட்டைத் தொகுதியில் சுற்றுப்பயணம்.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறநிலைய நிர்வாகத்துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் 106/68

நிர்வாக தர்மகர்த்தர், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி தேவஸ்தானம் கோவிந்தவாடி, காஞ்சிபுரம் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்

—மனுதாரர்

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டம் நெ. 149 கோவிந்தவாடி கிராமத்தில் இருக்கும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி தேவஸ்தானம் விஷயமாக.

மேற்படி தேவஸ்தானத்திற்குச் சொந்தமானதும் செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம், 149 கோவிந்தவாடி கிராமத்தில், சர்வே எண் 681-1-ல் அடங்கிய 12 ஏக்கர் அயன் புஞ்சை நிலத்தை, காஞ்சிபுரம் எம். எம். ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு செங்கல் சூளை வியாபாரம் செய்ய 15 வருடத்துக்கு ரூ. 3,000 (ரூபாய் மூவாயிரம்) செக்யூரிடி (Security Deposit) (பிணை வைப்புத் தொகை) டிபாசிட் செலுத்தி வருட வாடகை ரூ 1,500 (ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு) பெற்றுக்கொண்டு நீண்டகாலக் குத்தகைக்குவிட அனுமதி வேண்டி 1959-ம ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 22-1959, 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு.

நிபந்தனைகள்

1. குத்தகைகாரர் குத்தகைக்கு விடப்படும் மனையில் வெட்டப்படும் நீர் ஊற்றினை கிணறு குத்தகைக் கால முடிவில் எந்தவித நிபந்தனையுமின்றி தேவஸ்தானத்தின் வசம் ஒப்புவித்துவிட வேண்டும்.

2. குத்தகைதாரர் தேவஸ்தான மனையில் உள்ள களிமண் மற்றும் மணல் முதலியவைகளை அடுத்துள்ள நிலங்களின் அளவிற்கு மட்டுமே அப்புறப்படுத்த வேண்டும்.

நான்கெல்லைகள்

1. சாலைக்கு —கிழக்கில்
2. திரு. ஏகாம்பர நாயக்கரின் நிலத்திற்கும் சாலைக்கும் —மேற்கில்
3. வாய்க்காலுக்கு —வடக்கில்
4. திரு. மாணிக்க நாயக்கர் நிலத்திற்கும் சாலைக்கும் —தெற்கில்

மனு எண் 106/68/டி 1
தேதி 28—5—68

மேற்படி குத்தகை மனு குறித்து ஆணையாளர் சென்னையில் உள்ள தமது அலுவலகத்தில் 20—7—68 அன்று முற்பகல் 11-மணியளவில் விசாரணை நடத்துவார்.

2. கருத்துரைகளும் மறுப்புரைகளும் எவையேனும் இருப்பின் அவைகளை எழுத்து மூலமாக 19—7—68 அன்று—அதற்கு முன்பு இவ்வலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.

முறையீடுகள் எவையேனும் இருப்பின், அவைகள் நேரிலும் மேற்குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எம். எஸ். வீராசாமி
ஆணையாளருக்காக

சட்டத் துறை அமைச்சர்

செ. மாதவன் சுற்றுப்பயணம்

ஜுன் 15 மாலை 3-மணி: திருப்பத்தூர் வழக்கறிஞர்கள் சங்க வரவேற்பு; 4-30 மணி: வணிகத் துறை எழுத்தர்கள் சங்க வரவேற்பு; 6-மணி: திருப்பத்தூர் நகர கூட்டுறவு பாங்கியின் பொன் விழாவில் பங்கேற்பு; இரவு 7-மணி: நகராட்சிமன்ற வரவேற்பு; 7-30 மணி: பொதுக்கூட்டம்.

ஜுன் 16 காலை 9-30 மணி: பொள்ளாட்சி நகராட்சி வரவேற்பு; 11-மணி: அமராவதி விருந்தினர் மாளிகையில் பொதுமக்களைச் சந்தித்தல்; 3-30 மணி: உடுமலை நகர கூட்டுறவு பாங்கி பொன் விழாவில் பங்கேற்பு; இரவு 7-மணி: பொள்ளாச்சி பொதுக்கூட்டம்.

டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் விழா

[illegible]—68 மாலை 6-மணிக்கு [illegible]யாசர்பாடி சுந்தர முத[illegible]ல் டாக்டர் அம்பேத்[illegible]த நாள் விழா நடைபெறும்; தலைவர்: ஆ. தயாளன்; பேசுவோர்: க. ஆரியசங்காரன், கோ. குசேலர் எம்.பி, எஸ். எம். துரைராஜ் எம்.எல்.ஏ., அர்ச்சுனன் பி ஏ., மற்றும் பலர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.